# புத்தாண்டுத் திருப்பலி 2010

*Merry.. Merry.. Merry Christmas.. Oh.. Oh*
*Happy.. Happy.. Happy.. Christmas*
கன்னிமரி பாலனாய் -அன்றொருநாள் (கன்னிமரி)
பெத்தலேகமில் பிறந்தார்
கர்த்தரின் மைந்தன்
முத்து முத்தாக திகழ்ந்தார் -(கன்னிமரி)

நெஞ்சங்கள்.. ஓ.. ஓ.. ஒன்றாகி ஆ.. ஆ..
ஆனந்தம் கொண்டாடுதே
வானுலகும் பூவுலகும்
மலர்களை பொழிந்தாகுதே –(ஓ.. ஓ.. நெஞ்சங்கள்)
நாளெல்லாம் இறைமகனின்
அன்பும் ஒலித்திடுமே
பாரெல்லாம் அவர் அருளை
தினம் தினம் உணர்த்திடுமே -(கன்னிமரி)

இன்னல்கள் ஓ.. ஓ.. இந்நாளில் ஆ.. ஆ..
காற்றோடு பறந்தோடுதே
இனியவராம் மீட்பருமாய்
மன்னரும் வந்தாரன்றோ –(ஓ.. ஓ.. இன்னல்கள்)
பேதங்கள் இனியில்லையே
பகையும் மறைந்திடுதே
நாமெல்லாம் அவரன்பால்
ஒருவராய் இணைந்திடுவோம் -(கன்னிமரி)



## வருகைப் பாடல்



வாருங்கள் இறைமக்களே
கடல் அலையெனவே வாரீர் (வாருங்கள்)
நாம் அன்புள்ளம் கொண்டு – ஓரினமாக
அவர் புகழ் பாடிடுவோம் - நாளும்
அவர் வழி வாழ்ந்திடுவோம் (வாருங்கள்)

சிறு துளி பெரு வெள்ளம் ஆகிடுமே
எளியவர் நலம் பெற இணைந்திடுவோம் - (சிறு துளி)
வறியவர் வாழ்வுகள் உயர்ந்திடுமே
வறுமையின் அவலங்கள் அகற்றிடுவோம்
தேவன் அரசு மலர்ந்திடுமே
அன்பும் நீதியும் வளர்த்திடுவோம்

வாருங்கள் இறைமக்களே
கடல் அலையென வாருங்கள்

அருள் மொழி மனதில் கலந்திடவே
கறைகள் இதயத்தில் கலைந்திடுவோம் (அருள் மொழி)
மனிதனில் மனிதம் மலர்ந்திடவே
எழுகின்ற தீமைகள் அழித்திடுவோம் (மனிதனில்)
உரிமைகள் உடமைகள் அடைந்திடவே
இயேசுவின் கொள்கைகள் ஏற்றிடுவோம்
வாருங்கள் இறைமக்களே
கடல் அலையென வாருங்கள்

## தியானப்பாடல்

என் ஆன்மா ஆண்டவரை
ஏற்றி போற்றிடுதே – என்
மீட்பராம் கடவுளையே
நினைத்து மகிழ்கின்றதே
தாழ்நிலை நின்ற அடிமைதனை
கடைக்கண் நோக்கி உயர்த்திவிட்டார்
தலைமுறை யாவும் இனியென்னை
பேருடையாள் என போற்ற வைத்தாய் (என் ஆன்மா)

வல்லமை மிக்கவர்
என்றுமே நல்லவர் – அருட்பெரும்
செயல் புரிவார்
அவரை அஞ்சும் எளியவர் நெஞ்சம்
இரக்கத்தை ஊற்றுகிறார்
இதயத்தில் செருக்குற்ற - கல்மனதோரை
விரட்டியே அடித்திடுவார்
அரியணை மீது அமர்ந்திடுவோரை
அகற்றிட செய்திடுவார் (இதயத்தில்) (என் ஆன்மா)

தாழ்நிலை நின்றவர்
உயர்வினை அடைவர்
பசித்தோர் நலன் பெறுவர்
செல்வர் தம் செல்வமும் - செல்லரித்திடுமே
வெறுமையை கண்டிடுவர்
இறைவனின் வாக்கு அழிவதேயில்லை
சத்தியம் அதுதானே
அடியவர் மீது இறைவனின் - இரக்கம்
நிச்சயம் நிலைதானே (இறைவனில்) (என் ஆன்மா)



## காணிக்கைப் பாடல்

அர்ப்பணப்பூ நானாக உன்னிடம் வந்தேன் என்னை
அர்ச்சனையாய் கையளிக்க உன்கரம் தந்தேன் (2)
வாழ்க்கை எனும் நெடிதொரு பயணம் யாவுமே உந்தன்
வாழ்வு தரும் வார்த்தையால் வழிநடத்தவே பலிதருகிறேன்

கவலைகளால் உருக்குலைந்த உலகம் யாவுமே உந்தன்
கருணையினால் உருக்கொடுக்கும் கருவியாக்குமே
காரிருளின் நடுவினிலும் கலங்கரை விளக்காய்(2) உந்தன்
பேர்அருளின் பெருந்துணையில் கையளிக்க நான் பலி தருகிறேன்

நாயகனே உன்னை நம்பி நானிலத்தில் நான் இன்று
அடியெடுத்து வைக்கிறேன் வழிநடத்துமே
இலட்சியத்தில் பாதைகளில் இடர்கள் தாண்டி நான் உந்தன்
இறையரசை பரப்புகின்ற உறுதிவேண்டி நான் பலி தருகிறேன்

## திருவிருந்துப் பாடல்

உயிரில் காணும் உறவே – எந்தன்
மனதில் நிறைய வா
வெள்ளி நிலாவில் மறைந்து – உந்தன்
உறவை பகிர வா – (உயிரில்)

உள்ளத்தில் வந்து உயிரில் கலந்து
உண்மையில் உயர்ந்து வாழ
நன்மையின் அன்பை அழிக்க வந்த
உண்மையின் அன்புத் தேவா (உயிரில்)

கடல் அலையின் வருகைக்காய்
காத்திருக்கும் கரையைப்போல் - காத்திருந்தேன்
உன்னில் பார்த்திருந்தேன்
நிலை வாழ்வு பெற வேண்டி
நித்தம் உம்மை தேடி வர – நித்தியனே
நெஞ்சத்தில் நிறைந்திட வா
பூங்காற்றே எந்தன் உயிர் மூச்சே (2) – நீ
மெல்லிசையாய் என்னில் கலந்திட வா (உயிரில்)

ஒற்றுமையின் சின்னமாய்
உறவுகளின் பாலமாய் - வாழ்ந்திடவே
என்னில் விரைந்து நீ வா
ஏற்ற தாழ்வு நீக்கிட
ஏழ்மைநிலை போக்கிட-என்
உள்ளத்தையே இன்று நிறைத்திட வா
உயிர் கொடுப்பாய் -எனக்கு
உருக் கொடுப்பாய் -(உயிர்)
என்னிலே என்றும் வாழ்ந்திட வா -(உயிரில்)